**செய்தி வெளியீடு எண்: 297** **நாள்: 04.05.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (4.5.2018) சென்னை, பச்சையப்பன் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற பச்சையப்பன் கல்லூரியின் 175–வது ஆண்டு விழாவில் ஆற்றிய உரை.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி

பெருமை மிக்க பச்சையப்பன் கல்லூரியின்
175–வது ஆண்டு விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த இனிய விழாவில் சிறப்புரையாற்றிய
மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன்
**திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே !**

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கிற
மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர்
**திரு. டி.ஜெயக்குமார் அவர்களே!**

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர்
**திரு. கே.பி.அன்பழகன் அவர்களே!**

மாண்புமிகு மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
**திரு. எஸ்.ஆர்.விஜயகுமார் அவர்களே!**

இந்த நிகழ்ச்சிக்கு முத்தாக இருக்கின்ற, வரவேற்புரை ஆற்றிய
பச்சையப்பன் அறக்கட்டளை வாரியத்தின் தலைவர்
மரியாதைக்குரிய **திரு. எஸ்.ஜெயசந்திரன் அவர்களே!**

முன்னிலை வகிக்கும் பச்சையப்பன் அறக்கட்டளையின் நிதி அறங்காவலர்
**பேராசிரியர் வி.ராமநாதன் அவர்களே!**
மற்றும்
அறங்காவலர்கள்
**டாக்டர் ஆர்.பிரபாகரன் அவர்களே!**
**திரு. கே.ஹேமநாத் அவர்களே!**

மற்றும் அறக்கட்டளையின் உறுப்பினர் செயலாளர்
**திரு. வி.துரைமோகன் அவர்களே!**

நன்றியுரை ஆற்ற இருக்கின்ற
பச்சையப்பன் கல்லூரியின் முதல்வர்
**முனைவர் எஸ்.காளிராஜ் அவர்களே!**

மற்றும் இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே !
தலைமைக் கழக நிர்வாகிகளே,

மற்றும் நிகழ்ச்சியிலே பங்கு கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற
முன்னாள் அமைச்சர் மரியாதைக்குரிய திருமதி கோகுல இந்திரா அவர்களே,

சட்டப்பேரவை உறுப்பினர்கள் மரியாதைக்குரிய திரு.பலராமன் அவர்களே,
மரியாதைக்குரிய திரு.விஜயகுமார் அவர்களே,
மரியாதைக்குரிய திரு.சத்யா அவர்களே,
மற்றும் முன்னாள் அமைச்சர்
மரியாதைக்குரிய அண்ணன் திரு.சோமசுந்தரம் அவர்களே,
திரு. பாலகங்கா அவர்களே,
திரு.வாலாஜாபாத் கணேசன் அவர்களே,

மற்றும் நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற
உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகளே!

பேராசிரிய பெருமக்களே! மாணவ கண்மணிகளே!
பெற்றோர்களே! தாய்மார்களே! பெரியோர்களே!
செய்தியாளர்கள் (ம) ஊடகத் துறை நண்பர்களே!
உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்
கொள்கிறேன்.

‘**கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு**
**மாடல்ல மற்றை யவை**’என்ற குறளின் வாயிலாக

**‘ஒருவருக்கு அழியாத சீரிய செல்வமானது கல்வி என்றும், அது அல்லாமல்,**
**மற்றைய செல்வங்கள் எல்லாம் பெருமையானவை அல்ல**’ என்றும்
உறுதியாக கூறியுள்ளார்.

அதனால்தான்.. அறம் செய்ய நினைத்த
சான்றோர் பெருமக்கள், அந்தக் காலத்திலேயே அறக்கட்டளை வாயிலாக கல்விச் சாலைகளை நிறுவினார்கள்.

**அன்ன சத்திரம் ஆயிரம் திறப்பதைக் காட்டிலும்,**
**ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்பதுதான்**
மிகவும் சிறப்பானதாக கருதப்படுகிறது.

அறவழியில் ஒருவருக்கு கல்வியை கொடுத்துவிட்டால்.. அவருடைய எதிர்கால தலைமுறைக்கே கல்வி கொடுத்தது போலாகிவிடும்.
தலைமுறை தலைமுறையாய் நாட்டு மக்கள்
அனைவரும் கல்வி பெற்றுவிட்டால்
அன்ன சத்திரங்களின் அவசியமே நமக்கு ஏற்படாது.

அந்தக் கல்வியைக் கொடுக்கக்கூடியது
'**அறம்**' ஆகும். அதனால்தான் கல்விச் செல்வத்தைவிட ஒரு சிறப்பான முதன்மையான செல்வம் இருக்குமேயானால் அது '**அறம்**' ஒன்றாகத்தான் இருக்க முடியும் என்று அறத்தின் சிறப்பை
திருவள்ளுவர் கூறுகிறார்.

இந்த பச்சையப்பன் கல்லூரி பழமையும்,
பெருமையும் மிக்க கல்லூரியாகும்.
பச்சையப்பன் கல்லூரியில் படிப்பதும்,
பணிபுரிவதும் பெருமையாகும்.

மிகச்சிறந்த அரசியல் தலைவர்களையும்,
அறிஞர் பெருமக்களையும் உருவாக்கிய
மேன்மையான கல்லூரி இந்த கல்லூரி.

மற்ற கல்லூரிகளில் படித்து சாதனை புரிந்த பெருமக்களை நாம் அறிஞர்கள் என்றுதான் அழைக்கின்றோம். ஆனால், பச்சையப்பன்
கல்லூரியில் படித்த பேரறிஞர் அண்ணா அவர்கள் மட்டும்தான் **அறிஞர்** என்றும்,
பின்னர் **பேரறிஞர்** என்றும் மக்களால்
அழைக்கப்பட்டு தமிழ்நாட்டின்
முதலமைச்சராகவும் ஆனார்.

**கசடற கற்க!**
**கற்ற பின்,**
**அதன்படி நிற்க!**

என்ற கருத்தை பின்பற்றி பச்சையப்பன் கல்லூரியை சரியாகப் பயன்படுத்தியவர்கள்
அறிஞர்களாக முன்னேறுவார்கள் என்பதற்கு
பேரறிஞர் அண்ணா அவர்களே
முன்னுதாரணமாகத் திகழ்கிறார்கள்.

**'கல்விக்கும், அந்தக் கல்வியை வழங்கிய**
**கல்வி நிலையத்திற்கும் ஆயுள் மிகமிக அதிகம்**' என்பார்கள்.
லட்சக்கணக்கானவர்கள் பச்சையப்பன் கல்லூரியில் படித்திருக்கிறார்கள். அந்தக் கல்வியை வழங்கிய பச்சையப்பன் கல்லூரியை காலமும்,
வரலாறும் பதிவு செய்து உயிர்ப்புடன் வைத்திருக்கிறது.

இன்னும் எத்தனை காலங்கள் ஆனாலும்
பச்சையப்பன் கல்லூரி, சிரஞ்சீவியாகவே இருக்கும்; **இருக்க வேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன்.**

இந்த பொன்னான நேரத்தில்,
இந்த அறக்கட்டளையின் கருவாகத் திகழும்,
**அமரர் பச்சையப்பன்** அவர்களை நினைவுகூர்வது இன்றைய மாணவர்களை ஊக்கப்படுத்தும்
என்று நினைக்கிறேன்.
அமரர் பச்சையப்பன் அவர்கள்
தன் தாய் திருமதி. பூச்சியம்மாள் மற்றும்
இரண்டு சகோதரிகளுடன் 1759ஆம் ஆண்டு
சென்னைக்கு வந்தார்கள்.

ஆங்கிலேய வணிகர்களுக்கு மொழி பெயர்ப்பாளராய் விளங்கிய **திரு.நாராயண பிள்ளை** அவர்களிடம் அடைக்கலம் புகுந்தார்கள்.
தர்ம சிந்தனை கொண்ட திரு. நாராயண பிள்ளை அவர்கள் ஆங்கிலப் பயிற்சியுடன் கணக்கு மற்றும்
கடிதத் தொடர்பிலும் ஆழமான பயிற்சி அளித்து
**சிறுவன் பச்சையப்பன் அவர்களுக்கு**

**அடிப்படைக் கல்வியை ஊட்டினார்கள்.**
திரு. பச்சையப்பன் ஆங்கிலத்தில் அறிவு பெற்று
வணிகத் தொடர்பில் சிறந்து விளங்கினார்கள்.

இரக்க குணத்தோடும், கருணை உள்ளத்தோடும்
திரு. நாராயண பிள்ளை தனக்கு வழங்கிய கல்வியால்தான் தன் வாழ்க்கையில் பெரிய மாற்றம் ஏற்பட்டு, அந்த மாற்றம் பலருக்கும் முன்னேற்றத்தை வழங்கியதை
திரு. பச்சையப்பன் அவர்கள்
தன் வாழ்நாள் முழுவதும் மறக்கவில்லை.

அதன் வெளிப்பாடுதான்,
இன்று அமரர் பச்சையப்பன் அவர்கள் பெயரில் அறக்கட்டளை உருவாகி அதன் வழியாக
நாடு முழுவதும் கல்வி நிறுவனங்கள் மலர்ந்திருக்கின்றன.

பச்சையப்பன் அறக்கட்டளையால் நடத்தப்படும்
கல்வி நிறுவனங்கள் ஏதோ செங்கற்களாலும், கருங்கற்களாலும்
கட்டப்பட்டவையாக
நாம் கருதிவிடக்கூடாது. அவை அனைத்தும்
திரு. பச்சையப்பன் அவர்களுடைய உழைப்பு,
உண்மை, இரக்கம், கடவுள் பற்று, எளிமை,
அன்பு, தியாகம் ஆகியவற்றால் கட்டமைக்கப்பட்டவை என்பதை நாம் மறக்கக் கூடாது.

பழமையும் பெருமையும் மிக்க இந்தக் கல்லூரி சென்னையின் மையப் பகுதியில் 1842–ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் ஒரு பள்ளிக்கூடமாக தொடங்கப் பெற்று பிறகு கல்லூரியாக வளர்ந்தது.

1864ல் சிதம்பரத்தில் பள்ளிக்கூடம்,
1865ல் சென்னையில் பள்ளிக்கூடம்,
1866ல் செங்கல்வராய நாயக்கரின் பெயரில்
வணிகவியல் பள்ளி,
1950ஆம் ஆண்டுகளில் காஞ்சிபுரத்திலும்,
சின்னக் காஞ்சிபுரத்திலும் கிளை பள்ளிக்கூடங்கள்,

1950–ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் மறைந்த பெருமகனார் திரு. சி.கந்தசாமி நினைவாக
இரண்டாம் நிலைக் கல்லூரி,
1965ஆம் ஆண்டு சென்னையில் பள்ளிக்கூடம்,
1967ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் பெண்கள் கல்லூரி,
1967ஆம் ஆண்டு திரு. சி.கந்தசாமி அவர்களின் நினைவாக கடலூரில் ஒரு மகளிர் கல்லூரி,
1971ஆம் ஆண்டு சென்னை அண்ணா நகரில் ஆடவருக்கான கல்லூரி,
1972ஆம் ஆண்டு கிண்டியில்
செல்லம்மாள் மகளிர் கல்லூரி

என  அறக்கட்டளை கல்வி நிறுவனங்கள்
திரு. பச்சையப்பன் அவர்களை எப்போதும் நினைவுபடுத்திக் கொண்டே இருக்கின்றன.

இந்த அறக்கட்டளையின் காரண கர்த்தாவாகிய அறப்பணிச் செம்மல் திரு. பச்சையப்பன் அவர்களை அனைவரும் நினைவுகூரும் வகையில் அவருடைய திருவுருவச் சிலையை 5.1.1963 அன்று
அப்போதைய இந்தியக் குடியரசுத் தலைவர்
டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன் அவர்கள்
திறந்து வைத்தார்கள்.

ஏழை, எளிய மாணவர்கள், குறிப்பாக,
தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட,
மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள்
கல்வியில் முன்னேற வேண்டும் என்ற
உயரிய நோக்கத்தில் தொடங்கப் பெற்றதுதான் அறக்கட்டளை கல்வி நிறுவனங்கள்.

அறக்கட்டளையின் நோக்கம் வெற்றி பெற வேண்டுமானால் இங்கே பயிலும் மாணவர்கள்
தங்கள் பொறுப்பையும் கடமையையும்
உணர்ந்து நடந்து  இக்கல்லூரிக்கு
மேலும் பெருமை சேர்க்க வேண்டும்.

இந்த நாட்டின் எதிர்காலமும், மிகப்பெரிய சொத்தும் மாணவர்கள்தான் என்று கருதிய மாண்புமிகு

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாணவர்கள்
பெரிதும் பயன்பெறும் கல்வித் துறைக்கு
அதிக முக்கியத்துவம் வழங்கினார்கள்.
அதிக  நிதி ஒதுக்கீடும் செய்தார்கள்.

அதனை மேம்படுத்த பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களை
செயல்படுத்தினார்கள்.
புதிய பள்ளிகள், புதிய கல்லூரிகள்,
புதிய பாடத் திட்டங்கள், ஆசிரியர் மற்றும்
கல்விப் பணியாளர்கள் அதிகமான அளவில்
பணி நியமனம், மாணாக்கருக்கு கல்வி உதவித் தொகை,
விலையில்லா கல்வி உபகரணங்கள், மாற்றியமைக்கப்பட்ட சத்துணவு வகைகள்
என

பல்வேறு திட்டங்களால் தமிழ்நாட்டை கல்வியில்
சிறந்த தமிழ்நாடாக மாற்றிய பெருமை  மாண்புமிகு இதய தெய்வம்
புரட்சித்தலைவி அம்மா அவர்களையே சாரும்.

மாண்புமிகு  புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
ஆட்சிக்கு வந்த பிறகுதான் தமிழ்நாட்டில் குக்கிராமங்களிலிருந்து படித்து வந்த
இளைஞர்கள் கூட, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., மற்றும் இந்திய தொழில்நுட்பத்
தேர்வுகளிலும் அதிக அளவில்
வெற்றி பெறத் தொடங்கினார்கள்.

2011 ஆம் ஆண்டு வரை உயர் கல்வியில் படிக்கின்ற மாணவர் சேர்க்கை
விழுக்காடு  21 ஆக இருந்தது.
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் செயல்படும் அம்மா
ஆட்சியில் இன்று
உயர் கல்வியில் மாணவர் சேர்க்கை விழுக்காடு
46.90 ஆக உயர்ந்திருக்கிறது. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
கல்வியிலே செய்த புரட்சி மாற்றத்தின் விளைவாக, கல்விக்கு செய்த உதவியின்
விளைவாக, இன்றைக்கு உயர்கல்வி படிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை
உயர்ந்து இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது என்பதை
பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு  மாண்புமிகு அம்மா அவர்கள் வகுத்துக் கொடுத்த கல்வித்
திட்டங்கள்தான் காரணமாகும்.

2017–2018ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் உயர்கல்வித் துறைக்கு மட்டும் 3 ஆயிரத்து 680 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. 9 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்பட்டன.
3 புதிய பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்பட்டன.
ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம்
ஒரு ஆண்டில் மட்டும் 188 உதவி பேராசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
இப்படி இந்த அரசு கடந்த ஓராண்டில் செய்த
கல்விப் புரட்சியை பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

அரசும், பச்சையப்பன் அறக்கட்டளை போன்ற
சிறந்த கல்வி அறக்கட்டளைகளும்,
அறத்தின் வழியில் கல்வியை
அள்ளி அள்ளிக் கொடுத்தாலும்,
அதை பெறுகிற மாணவச் செல்வங்கள்
நன்கு பயனடைந்து, வளமான, நலமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று நான் இந்த இனிய வேளையில் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**தேர்வில் வெற்றி பெறுவது அல்ல**
**முழுமையான வெற்றி!**
**வாழ்க்கையில் வெற்றி பெறுவதுதான்**
**உண்மையான வெற்றி!**

**போட்டிகளில் முதன்மையான இடங்களை பிடிப்பது முழுமையான வெற்றி அல்ல.**
**முன்னேறிக் கொண்டே இருப்பதுதான்**
**உண்மையான வெற்றி!**

**உங்கள் முன்னேற்றத்திற்கு முதலீடு நீங்கள் செலவழிக்கும் நேரம்தான்.**
**உங்கள் நேரம்தான் உங்கள் வாழ்க்கை.**
**உங்கள் வாழ்க்கைதான் நீங்கள் இந்த சமுதாயத்திற்கு சொல்லும் செய்தி!**

இன்றைக்கு உங்களுக்கு பலவிதமான
ஆசைகளைக் கூறி உங்கள் கல்வியை பாழ்படுத்த
பல சுயநல சக்திகள் உருவாகி வருகின்றன.

அவர்களுடைய போலி வாக்குறுதிகளை நம்பாமல் உங்களை பெற்றெடுத்த பெற்றோருக்கு
நல்ல பிள்ளைகளாக,
நம்பிக்கைக்குரிய பிள்ளையாக
நீங்கள் கடமையாற்ற,
உங்கள் வழியில் கடுமையாக
உழைத்து முன்னேறுங்கள்.

இன்று மாணவர்களின் கவனத்தை சிதறடிக்கும் வலைதளங்கள், வாட்ஸ் அப், சின்னத்திரை,
பெரிய திரை போன்றவற்றில் உங்களின்
பொன்னான நேரத்தை செலவழிக்காமல்,

உங்கள் அறிவுக்கு தேவையான
செய்திகளை பெறும் சாதனமாக மட்டுமே
அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

**உண்மையான செய்திகளை மட்டுமே நம்புங்கள். போலியான அவதூறான செய்திகள்**
**அலங்காரமாக வந்து உங்களை மயக்கக்கூடும்.**
**அதையெல்லாம் நம்பி திசைமாறி விடாதீர்கள்.**

சிறந்த ஆற்றலும், வலிமையான சக்தியும்
உங்களிடம் ஏராளமாக பொதிந்து கிடக்கின்றன.

உங்களை நீங்கள் முழுமையாக புரிந்து கொண்டால், வெற்றிகள் உங்களைத் தேடி வரும்.
இதை ஒரு நிகழ்வின் மூலம் கூறினால்
உங்களுக்கு நன்கு விளங்கும் என கருதுகிறேன்.

இளைஞன் ஒருவன் குருவிடம் சென்று,
**“குருவே, நான் தோற்றுக் கொண்டே இருக்கிறேன்.**
**வெற்றி பெறுவதற்கான வழிமுறைகள் ஏதாவது இருந்தால் கூறுங்கள்”** என்று கேட்டான்.

அதற்கு குரு,
**“தோற்று விடுவோம் என்ற உன்**

தாழ்வு மனப்பான்மையையும்,
தோல்வி மனப்பான்மையும் தூக்கி எறிந்துவிடு,

மற்றவர்களைக் கவர்ந்து இழுக்குமாறு
உன் தோற்றம் அமைய வேண்டும்.
அதற்கு ஒரே வழி,

கழுதை அழுக்குப் பொதியை சுமப்பது போல,
உன் மனதுக்குள் இருக்கும் கவலைகள்,
வருத்தங்கள் போன்றவற்றை சுமக்காமல்,
அவற்றை இறக்கி வைத்து விடு.
உன் தோற்றம் பொலிவு பெற்று
மற்றவர்களைக் கவரக்கூடியதாக மாறும்.

நினைப்பதை மிக உயர்வாக நினை.
அவ்வாறு நினைத்தால்,
உன்னுடைய ஏழ்மைத் தன்மை, வறுமை ஆகியவற்றிலிருந்து நீ விடுதலை பெறுவாய்.

நீ எப்போதும் நியாயத்தை மட்டுமே பேசு.
எதையும் கூர்மையாக உற்று நோக்கு.
நீ எங்கே சென்றாலும்,
கூடவே மகிழ்ச்சியையும் எடுத்துச்செல்.

நல்லதை மட்டுமே நினை.
உன் எண்ணம் போலத் தான் நீ வளர்வாய்.
உன் மனதிற்கு நீ அடங்கக் கூடாது.
உனக்கு மனம் அடங்க வேண்டும்.
எதுவும் எளிதில் கிடைக்க
வேண்டுமென்று ஆசைப்படாதே,
உழைத்துப் பெறப்படுவது தான்
நீண்ட நாள் நிலைக்கும்.

யாராலும் செய்ய முடியாது என்று
மற்றவர்கள் நிராகரித்ததை,
சவாலாக எடுத்து நீ செய்து காட்டு.

**நான் கூறியவற்றை பின்பற்றினால்,**
**உனக்கு நிச்சயமாக வெற்றி கிட்டும்",**
என்று குரு கூறினார்.

மேலே குரு தனது சீடனுக்கு கூறிய
வெற்றி மந்திரங்கள்
அந்த இளைஞனுக்கு மட்டுமல்ல,

இதனை, இங்கே இருக்கிற அத்தனை இளைஞர்களும்
பின்பற்றினால், தோல்வி என்பது உங்களை
ஒருபோதும் நெருங்காது என்று உறுதியாக
கூறிக்கொள்கிறேன்.

நீங்கள் வெற்றி பெற மீண்டும் உங்களை வாழ்த்துகிறேன்.

இங்கே ஒரு முக்கிய ஒற்றுமையினை
நான் குறிப்பிட விரும்புகிறேன்.

1968 ஆம் ஆண்டு பச்சையப்பன் அறக்கட்டளையின்
125 ஆம் ஆண்டு விழாவில்
மாண்புமிகு பேரறிஞர் அண்ணா அவர்கள்
கலந்து கொண்டு பெருமை சேர்த்தார்கள்.

1994 ஆம் ஆண்டு பச்சையப்பன் அறக்கட்டளையின்
150–ஆம் ஆண்டு விழாவில்
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
கலந்து கொண்டு இந்த கல்லூரிக்கு பெருமை சேர்த்தார்கள்.

இவ்விரு பெருந்தலைவர்களையும் தொடர்ந்து,
மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியால்,

இந்த அறக்கட்டளையின்
175 –ஆம் ஆண்டு விழாவில்
கலந்துகொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியும்,
பெருமையும் அடைகின்றேன்.

எனவே, எனக்கு இந்த வாய்ப்பை நல்கிய

பச்சையப்பன் அறக்கட்டளை நிருவாகிகளுக்கும், பச்சையப்பன் கல்லூரியின்
175 வது ஆண்டு விழாக்
குழுவினருக்கும் மீண்டும் ஒரு முறை
எனது வாழ்த்துகளையும், நன்றியையும்
தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**